## இளங்கலை தமிழ்

முதலாம் ஆண்டு – முதல் பருவம்
பாடக்குறியீட்டு எண்: 7BTAA1

### இணைப்பாடம் - தாள் 1- இதழியல்

**அலகு 1**

இதழியல் தோற்றம் வளர்ச்சி - இந்திய இதழியல் வரலாற்றுத் தொடக்கம் - இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கு

**அலகு 2**

இதழ்களின் பணி - இதழ்களின் மொழி நடை - இதழ்களின் நோக்கம் இந்திய மொழி இதழ்கள் - தமிழ் மொழி இதழ்கள்

**அலகு 3**

செய்தித்தாள் நிருவாகம் - அலுவலக அமைப்பு இயந்திரப் பகுதி விற்பனைப் பகுதி – செய்தி விளக்கம் - செய்தி வகைகள் - செய்தி சேகரிக்கும் மூலங்கள் - செய்தி எழுதுதல் - தலையங்கம் - கட்டுரை

**அலகு 4**

செய்தி ஆசிரியர் குழுவின் பணிகள் - துணை ஆசிரியர் - மெய்ப்புத் திருத்துதல் - செம்மையாக்கம் - செம்மையாக்கக் குறியீடு – பக்கப் புனைவு

**அலகு 5**

உலகச் செய்தி நிறுவனங்கள் - ராய்ட்டர் - அசோசியேட் பிரஸ் - இந்தியச் செய்தி நிறுவனங்கள் - அசோசியேட் பிரஸ் ஆப் இந்தியா – டைம்ஸ் ஆப் இந்தியா – யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா - இதழ்களின் விளம்பரம்.

பாடநூல்: - இதழியல் கலை – மா.பா. குருசாமி, 6 வது தெரு, ஏ.கே. எம்.ஜி.ஆர். நகர், திண்டுக்கல்-1, 0451 2424853

பார்வை நூல் : - இதழியல் - இரா. கோதண்டபாணி
இதழியல் - ச.ஈஸ்வரன் பாவை பதிப்பகம், சென்னை

♦♦♦♦♦♦♦♦♦♦

# இரண்டாம் பாகம்

# இதழியல் – தோற்றமும் வளர்ச்சியும்

## 8. இதழியல் வளர்ச்சி வரலாறு

### I. செய்தித்தாளின் அடிப்படையும் தோற்றமும்

கூட்டு வாழ்க்கையில் மனிதன் ஈடுபட்ட காலத்திலிருந்தே, மனிதர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கியிருக்கலாம். நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம், மனிதனின் உடன் பிறப்பு. பேச்சு மொழி உருவாவதற்கு முன்பே 'செய்கைகள்' மூலமும், ஒலிகளின் மூலமும் மனிதர்கள் செய்திகளைப் பரப்பினார்கள்.

சீழ்க்கை ஒலியாலும், பறையறைவித்தும், மணியடித்தும் புகை எழுப்பியும், தீயம்புகளை வானத்தில் எறிந்தும் ஓரிடத்தில் நடப்பதை சுற்றுவட்டாரத்து மக்களுக்கு அறிவிக்கும் பழக்கம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தோன்றியதாகும்.

பேச்சு மொழி வளர, வாய் வழியாக, விரிவாகச் செய்திகளைப் பரப்ப முடிந்தது. ஒருவரை ஒருவர் பார்க்கின்றபொழுது நடப்பு விவரங்களைக் கேட்டறிந்து, அறிந்தவற்றை மற்றவர்களுக்கும் கூறிவந்தனர். இன்றும் செவிவழிச் செய்திகள் விரைந்து பரப்புவதைக் காணலாம்.

மனிதன் எழுதக் கற்றுக்கொண்ட பிறகு எழுத்தின் மூலமும், ஓவியங்களின் வாயிலாகவும் செய்திகளைப் பரப்பினான். ஆட்களை அனுப்பியும், புறாக்களின் ஓலைகளைக் கட்டி அனுப்பியும் செய்திகளைப் பரப்ப எழுத்துமுறை துணை செய்தது. எகிப்து நாட்டில் அடிமைகளை வைத்தும், கிரேக்க நாட்டில் குதிரையாட்கள் அரசனின் செய்திகளைப் பரப்பியதாக வரலாறு கூறுகின்றது.

**அரசுச்செய்திகள் :** செய்தித்தாட்களின் மூலங்களாக உலகில் பல்வேறு நாடுகளில் மன்னர்கள் தங்களது செய்திகளைப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகளும், முறைகளும் அமைந்தன.

ரோம் நாட்டை ஆண்ட ஜூலியஸ்சீசர் கி.மு.60–இல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' (Acta Diurna- அன்றாட நடவடிக்கை) என்ற பெயரில் எழுதி பொது இடங்களில் வைத்தார். அவர் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது, போர்ச் செய்திகளை தலைநகருக்கு அனுப்பிவந்தார். இதனால் சீசரை 'இதழியலின் தந்தை' என்று

அழைக்கின்றனர். ஆனால் சிலர், சீசருக்கு முன்பே கி.மு.106 இல் சிசரோ, பிறப்பு–இறப்பு விவரங்களை எழுதி தனது அரண்மனைக்கு முன்னால் பலரும் பார்க்க அறிவித்தாரென்றும், ஆதலால் அவரையே இதழியலின் முன்னோடியாகக் கருத வேண்டுமென்று கூறுகின்றனர்.

இத்தாலியில் ஆஷ்டிரியா என்ற இடத்தில் அகலமான கற்பாறைகளில் கி.மு.49 ஆம் ஆண்டு பாம்பே (Pombey) மன்னனின் இறப்புச் செய்தி குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

நமது நாட்டில் அசோகரின் கல்வெட்டுக்களை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம். புத்தமதக் கொள்கைகளையும் அரசு கட்டளைகளையும் பரப்புவதற்கு இவை பெரிதும் பயன்பட்டன.

கி.பி.எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் 'பீகிங் செஜட்' (Peking Gazette) என்ற மரத்தால் செய்த அச்சுக் கருவிகளைக் கொண்டு பத்திரிகை வெளியிடப்பட்டதனை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனையே முதல் பத்திரிகையாக கருதலாம்.

**காகிதமும் அச்சுக்கலையும்:** இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தவை காகிதமும் அச்சுக்கலையுமாகும். இவை இல்லை என்றால் இதழியல் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க இயலாது.

கி.பி. 105 இல் மல்பெரி மரப்பட்டையிலிருந்து சாய்லன் என்ற சீனாக்காரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். சீனர்களோடு வாணிபம் செய்த உலக நாட்டினர் காகிதம் செய்யும் கலையைக் கற்றுச் சென்றனர். கி.பி.795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகிதம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவினார்.

அச்சுக் கலையும் முதலில் சீனாவில் தான் தோன்றியது. மர எழுத்துக்களைச் செய்து, அவற்றில் மை தடவி தாளில் 'அழுத்தி' (Press) அச்சிட்டனர். அச்சகத்திற்கு 'பிரஸ்' என்று பெயர் வந்ததற்கும் இதுவே காரணமாகும். கி.பி.1041 இல் பிசெங் என்ற சீனாக்காரர் களிமண்ணில் எழுத்துக்களைச் செய்து சுட்டு, தகடு சுத்தி, கடினப்படுத்தி, அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். அதன் பின்பு அச்சுக் கலையில் புரட்சி ஏற்பட்டது.

கி.பி. 1450இல் ஜான் கூடர்பர்க் (John Guterberg - 1398 - 1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப் பொறியினைக் கண்டு பிடித்தார்

துதிபாடி, அதன் ஆதரவிலும் தயவிலும் நடைபெற்றன. இவற்றிற்கு மாறுபட்ட நிலையில் அரசிற்குப் பணியாததாக 'இந்தியன் ஓர்ல்டு' (Indian World) என்ற இதழை வில்லியம் டூயன் (William Duane) என்பவர் தொடங்கினார். இதுவும் இடையில் நின்று விட்டது.

**சென்னையில் இதழ்கள்:** 1785 அக்டோபர் 12–இல் சென்னையிலிருந்து முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnson) என்பவர் 'சென்னை கூரியர்' (Madras Courier) என்னும் ஆங்கில வார இதழை அரசின் ஆதரவோடு வெளியிட்டார். இதன் ஆசிரியராக இருந்த ஹியூக் பாய்டு 1791இல் இவ்விதழிலிருந்து விலகிச் சென்று, 'ஹார்காரு' (Harkaru) என்ற இதழைத் தொடங்கினார். தொடங்கிய ஓராண்டு காலத்தில் இவ்விதழின் ஆசிரியர் மறைய, இவ்விதழ் நின்றுவிட்டது. 1795இல் வில்லியம்ஸ் (Williams) 'சென்னை கெஜட்' (Madras Gazette) என்ற இதழும் ஹாம்ப்ரீஸ் (Hampreys), 'இந்தியன் ஹெரால்டு' (Indian Herald) என்ற இதழையும் தொடங்கி நடத்தினர்.

**பம்பாயில் இதழ்கள்:** பம்பாயின் முதல் இதழாக 'பம்பாய் ஹெரால்டு' (Bombay Herald) 1789இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து 1790இல் லூக் ஆஸ்பர்னர் 'பம்பாய் கூரியர்' (Bombay Courier) இதழைத் தொடங்கினார்.

**இதழ்கள் ஒழுங்குமுறைச் சட்டம்:** 1790ஆம் ஆண்டிற்குப் பின் இந்திய இதழ்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. குறிப்பாக கல்கத்தாவில் 'ஆசியாடிக் மிர்ரர்' (Asiatic Mirror 1794), 'கல்கத்தா கூரியர்' (Calcutta Courier), 'இன்டியன் அப்பல்லோ' 'பெங்கால் ஹாரகாரு', (Bengal Harkaru-1795) 'டெலிகிராப்' (Telegraph-1796) 'கல்கத்தா மார்னிங் போஸ்ட்' (Calcutta Morning Post), 'ஓரியண்டல் ஸ்டார்' (Oriental Star-1791) ரிலேட்டர்' (1799) ஆகிய இதழ்கள் வெளிவந்தன.

இதழ்களின் பெருக்கத்தையும் அவை செய்திகளை வெளியிட்ட முறையும் ஆட்சியாளர்களை அச்சுறுத்தின. ஆதலால் ஆட்சியாளர்கள் தொடக்கத்திலிருந்தே இதழ்களை கட்டுப்படுத்தி, தங்களது

அங்கும் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு அளித்திருக்கும் சாசனத்தைப் புதுப்பிப்பதை எதிர்த்தார். இந்தியர்களுக்கு நாட்டின் நிர்வாகத்தில் பங்குதர வேண்டுமென்று வாதிட்டார்.

இந்திய இதழியல் வரலாற்றில் தனது பணிகளின் மூலம் பக்கிங்காம் சிறப்பான ஓரிடத்தைப் பெற்றிருக்கின்றனர்.

**இராஜாராம் மோகன்ராய்** (Raja Ram Mohan Roy-1772-1833) தற்கால இந்தியாவை உருவாக்கியவர்களில் ஒருவரான இராஜாராம் மோகன்ராய், இந்திய இதழியல் வளர்ச்சிக்குச் செய்த தொண்டு மகத்தானதாகும். அவர் சமுதாய சீர்த்திருத்தவாதியாகவும், நாட்டின் நலம் பேணுபவராகவும் செய்த தொண்டுகள் பலவாகும். இவரைப் பற்றி எம்.சலபதிராவ், "இராஜாராம்மோகன் ராய் இந்திய மறுமலர்ச்சியின் விடிவெள்ளி; நன்கு கற்றவர்; சிறந்த அறிஞர்; சத்திய வேட்கையும் செயல் நாட்டமும் கொண்ட தீரமிக்க சீர்த்திருத்தவாதி. அவரது கேள்விகளுக்கு விடைகளைத் தேடி திபேத்திலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் அலைந்து திரிந்ததால் அறிவாற்றலையும், ஆழ்ந்த ஆன்மீக உணர்வையும் பெற்றவர். யாரையும் கவரும்வகையில் அறிவுச் சுடரொளி பரப்பும் பேச்சாளர்; சோர்வில்லாமல் விவாதிப்பதில் வல்லவர்,"[4] என்றும் புகழாரம் சூட்டி வர்ணிக்கின்றார்.

இராஜாராம் மோகன்ராய் 1815வரை கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றி, ஓய்வு பெற்றார். இளமையிலேயே சமஸ்கிருதம், பெர்ஷிய மொழி, அராபிய மொழி, ஹீப்ரு, கிரேக்க மொழி, ஆங்கிலம், வங்காள மொழி, ஆகியவற்றில் நுண்ணிய புலமை பெற்றுத் திகழ்ந்தார். கல்கத்தாவில் வாழ்ந்த இவர் உடன்கட்டை ஏறுதலை (Sati) எதிர்த்துப் போராடினார். இதன் விளைவாகத்தான் 1829இல் வில்லியம் பெண்டிங் பிரபுவால் உடன்கட்டை ஏறுதலை ஒழிக்கச் சட்டம் கொண்டு வர முடிந்தது. இந்த சமயத்தில் கறைகளாகவும் குறைகளாகவும் இருக்கும் உருவ வழிபாடு, விலங்குகளைப் பலியிடுதல், பல திருமணம் செய்து கொள்ளுதல், சாதிமுறை ஆகியவற்றைப் போக்க தனது எழுத்துக்களின் மூலம் தொடர்ந்து பாடுபட்டார். இதற்காகவே பிரம்ம சமாஜத்தை தொடங்கினார். ஆங்கிலக் கல்வியின் தேவையை உணர்த்தினார். அரசியல் சுதந்திரத்தையும் பத்திரிகை சுதந்திரத்தையும் மீட்கப் போர்க்கொடி உயர்த்தினார். தனது கொள்கைகளை விளக்கி சொந்தச் செலவில் புத்தகங்களையும், கையேடுகளையும் வெளியிட்டு, பலருக்கும் இலவசமாக வழங்கினார்.

## III. இதழியலின் சிறப்பிடம்

இதழ்கள் படிப்படியாக வளர்ந்து, இப்பொழுது எல்லாத் துறைகளையும் ஊடுருவி, மிகவும் ஆற்றலுடைய சமுதாய சக்தியாக உருவெடுத்திருக்கின்றன. பத்திரிகைகளைப் புறக்கணித்து விட்டு இன்றுயாரும் அமைதியாக வாழமுடியாது.

எத்தகைய ஆட்சி அமைப்பாக இருந்தாலும் மக்களோடு தொடர்பு கொள்வதும், மக்களுக்குக் கருத்துக்களையும் கொள்கைகளையும் கூறுவதும், அவர்கள் எண்ணப் போக்கினைப் புரிந்துகொள்வதும் இன்றியமையாத் தேவையாகின்றது. இதற்குச் செய்தித்தாட்கள் தான் துணை செய்கின்றன.

அரசியலில் இதழியலுக்குரிய சிறப்பான பங்கினைச்சென்ற நூற்றாண்டிலேயே அறிஞர்கள் சுட்டிக் காட்டினர். 1828 இல் 'அரசியல் நிர்ணய வரலாறு' (Constitutional History) பற்றி ஒரு கட்டுரை எழுதிய புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர் மெக்காலே (Macaulay) முதன் முதலில் இதழியலாளர்களை "அரசின் நான்காம் தூண் " (Fourth Estate) என்று வர்ணித்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அதற்கு விளக்கமாக எட்மண்ட் பர்க் (Edmund Burke), "நாடாளுமன்றத்தில் அரச குடும்பம் (Royalty), பிரபுக்கள்சபை (சமயத் தலைவர்கள், செல்வந்தர்கள் கொண்ட சபை) (House of Lords) பொதுமக்கள் சபை (House of Commons) ஆகிய மூன்று தூண்கள் உள்ளன. ஆனால் அங்கே செய்தியாளர்கள் (Reporters) அமருமிடத்தில் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமான நான்காவது தூண் உள்ளது," என்று குறிப்பிட்டார்.

நமது நாட்டிலும் நாடாளுமன்றம் (Parliament), நிர்வாகத் துறை (Executive), நீதித்துறை (Judiciary) ஆகிய மூன்று அரசின் துறைகளோடு, பத்திரிகைத் துறையை (Press) நான்காவது பிரிவாகக் கருதலாம். இந்த நான்காம் துறை சுதந்திரமாக, நேர்மையாக, பொறுப்போடு செயல்படுகின்றவரை, மக்களின் நலம் பாதுகாக்கப்படுமென்று கருதலாம்.

# 2. இதழ்களின் பணிகளும் பொறுப்புகளும்

## I. இதழ்களின் நோக்கம்

இன்றைய உலகில் ஆற்றல்மிக்கவையாக விளங்கும் இதழ்களால் சிறந்த பயன்கள் கிடைக்க வேண்டுமானால் அவை தங்களது பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும். உண்மையான மக்களாட்சி செயல்பட வேண்டுமானால் எல்லா மக்களும் ஆட்சியில் அறிவார்ந்த முறையில்

பங்குபெற வேண்டும். அதற்குத் துணைசெய்வதாக இதழ்கள் இருக்கின்றன.

மக்கள் தகவல் தொடர்பில் (Mass Communication) இதழ்கள் தலையாய இடத்தைப் பெறுகின்றன. இதனை, ஆர்.கே.சாட்டர்ஜி "மக்கள் தகவல் தொடர்பு உண்மையான நடவடிக்கைகள், கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றினை ஒட்டியும், நாடு தனக்கு முன் வைத்திருக்கும் தேவைகள், கொள்கைகள் ஆகியவற்றினைச் சார்ந்தும் செயல்படுகின்றது. இது ஓர் உயிரோட்டமான இயல். எடுத்துக்காட்டாக, பத்திரிகைத் துறை மக்களுக்குத் தெரிவிப்பதையோ, கற்பிப்பதையோ மட்டும் செய்வதில்லை; பொதுப் பணிகளின் கண்காணிப்பாளராகவும், மக்களின் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல்படுகின்றது", என்று குறிப்பிடுகின்றார்.

"வாளைவிட பேனா முனை வலுவுடையது", என்பதை உலகெங்கும் இதழியலாளர்கள் உணர்த்தியுள்ளனர்.

நமது நாட்டின் விடுதலைக்காக இதழ்கள் செய்த அரும்பணியை மறக்க இயலாது. அன்றை இதழியலாளர்கள் உயர்ந்த நோக்கோடும், தியாக உணர்வோடும் நடத்திய இதழ்கள் நாட்டு மக்களை தட்டி எழுப்பின.

**உயர்ந்த குறிக்கோள்:** இதழ்கள் சிறந்த குறிக்கோளோடு செயல்பட வேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்கமின்றி, வெறும் ஆதாய நோக்கத்தோடு செயல்படும் இதழ்களால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன்களை விட கேடுகளே மிகுதியாக இருக்கும்.

அண்ணல் காந்தியடிகள் தனது சுயசரிதையில், "செய்தித்தாளின் நோக்கங்களில் ஒன்றாக, மக்களின் உணர்வினை அறிந்து, அதனை வெளியிடுவது இருக்க வேண்டும். மற்றொன்று, மக்களிடம் சில மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்க வேண்டும். மூன்றாவதாக, பொதுமக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்க வேண்டும்", என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

இதழ்களின் பணிகள் எப்படிப்பட்ட குறிக்கோள்களோடு அமையவேண்டுமென்பதை இங்கிலாந்தின் பத்திரிகை மன்றம் (Press Council) தனது இரண்டாவது ஆண்டு அறிக்கையில், 'அநீதியை வெளிகாட்டுவது, தவற்றைத் திருத்துவது, ஆலோசனை வழங்குவது, நண்பர்களில்லாதவர்களோடு நட்புக் கொள்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாட்கள் செய்ய வேண்டிய சேவைகளில்

அடங்கும். வேறு வகைகளில் பெற முடியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும். பொதுக் காரணங்களை எடுத்துக் கொண்டு தேவையானால் போராட்டங்கள் நடத்தவும் வேண்டும்," என்று அழகாக விளக்குகின்றது.

## II. இதழ்களின் பணிகள்

இதழ்களின் பணிகளை மரபு வழியில் அவை செய்கின்ற **பொதுப்பணிகள்** என்றும், மாறிவரும் சமுதாயத்தில் மேற்கொள்கின்ற **வளர்ந்து வரும் பணிகள்** என்றும் பகுத்து விளக்கலாம்.

**பொதுப்பணிகள்:** அறிவித்தல் (To inform), அறிவுறுத்தல் (To instruct), மகிழ்வித்தல் (To entertain), வாணிபம் செய்தல் (To merchandise) ஆகிய நான்கு பணிகளை இதழ்கள் திறம்படச் செய்யவேண்டும். இவற்றை இதழ்களின் பொதுப்பணிகள் எனலாம்.

*1.* ***அறிவித்தல்:*** இதழ்களின் தலையாய பணி மக்களிடம் செய்திகளைப் பரப்புவதாகும். மக்களுக்கு எல்லா விவரங்களையும் உடனுக்குடன், உண்மையாக, விருப்பு—வெறுப்பின்றி சிதைக்காமல் முழுமையாக வழங்க வேண்டும். நாட்டில், சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு ஆகியவை தொடர்பாக நடைபெறும் எல்லா நடவடிக்கைகளையும் விளக்கிக் கூறுகின்ற பொறுப்பான பணியை இதழ்கள் செய்கின்றன. மக்கள் அறிய விரும்புகின்ற விலைவாசிகள் விளையாட்டு முடிவுகள், நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இதழ்கள் திகழ வேண்டும். இந்த வகையில் இதழ்கள் நடப்பு நிகழ்ச்சிக்களஞ்சியங்களாகும்.

அறிவித்தல் பணியை இதழ்கள் எப்படிச்செய்ய வேண்டும் என்பதை அகில இந்திய செய்தித்தாட்களின் ஆசிரியர்கள் கூட்டம் (All India Newspaper Editors' Conference) முதல் பத்திரிகை குழுவிற்கு (First Press Commission) அளித்த குறிப்பில், 'இதழியல் நடப்பு நிகழ்ச்சிகளையும், கருத்துக்களின் போக்குகளையும் மக்களுக்குத் தெரிவிக்கவும், விரிந்து செல்லும் பரப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், கட்டிக்காக்கவும், பல்வேறு வகையான கருத்துக்களையும் வெளிகாட்டும் வகையில் நடைமுறைச் சிக்கல்களைப்பற்றிய விவாதத்தைத் தூண்டவும் முயல வேண்டும். இவற்றிற்கெல்லாம் செய்திகளையும் (News) கண்ணோட்டங்களையும் (Views) துல்லியமாக நடுநிலையில் வெளியிடுவதும், மோதுகின்ற இலட்சியங்களை பற்றின்றி மதிப்பீடு செய்வதும் தேவையானதாகும்", என்று விளக்கம் கூறியிருக்கின்றது.

**2. அறிவுறுத்தல் :** இதழ்கள் செய்திகளை வெளியிட்டால் மட்டும் போதாது; தேவையான விவரங்களையும் வழங்கி மக்களைச் சிந்திக்கச் செய்யவேண்டும். இது இதழ்கள் செய்ய வேண்டிய ஒரு கல்விப் பணியாகும்.

எடுத்துக்காட்டாக, இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் நமது முன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் ராஜீவ் காந்தியும், முன்னாள் இலங்கை குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவும் கையெழுத்துப் போட்ட செய்தியை வெளியிடுவது அறிவிப்புப் பணியாகும். என்னபின்புலத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது, அதனுடைய விளைவுகள் எப்படி இருக்கும் என்பன போன்றவற்றை வாசகர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்வது அறிவுறுத்தல் பணியாகும்.

நமது நாட்டில் அரசு பல்வேறு வகையான முன்னேற்றப் பணிகளை மேற்கொள்கின்றது. அவற்றில் மக்கள் முழுமனதோடு ஈடுபட வேண்டுமானால், அவற்றைப் பற்றிய அறிவும் தெளிவும் மக்களுக்கு ஏற்பட வேண்டும். இதற்கு வேண்டிய வகையில் தலையங்கங்கள் (Editorials) எழுதியும், சிறப்புக் கட்டுரைகள், கருத்துப்படங்கள், விளக்கப்படங்கள் வெளியிட்டும் இதழ்கள் மக்களின் அறிவை வளர்க்கத் துணை செய்கின்றன.

நல்ல இதழ்கள் மக்களிடம் தொடர்கல்வியை (Continuing Education) வளர்க்கும் சாதனங்களாக விளங்குகின்றன. இதழ்களைப் படித்து, அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து வல்லுநர்களாகி, வாழ்க்கையில் முன்னேறி வெற்றி பெற்றவர்கள் உள்ளனர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"அறிஞர் தம்இதய ஓடை
    ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
    செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
    குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
    நலம்காணார் ஞாலம் காணார்," என்றும்,
"தெருப்பெருக் கிடுவோருக்கும்
    செகம்காக்கும் பெரியோருக்கும், கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
    இருந்திடல் வேண்டும்! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற்றிளநடை
    பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும்
    உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!"

என்றும் இதழ்களின் கல்விப்பணியை இலக்கிய நயத்தோடு இயம்புவதைக் காணலாம்.

3. **மகிழ்வித்தல்:** இதழ்களின் மற்றொரு பணி வாசகர்கள் சோர்ந்துவிடாமலிருக்க அவர்களை உற்சாகமூட்டி, உணர்வுகளுக்குத் தீனியளித்து மகிழ்விப்பதாகும். இதழ்கள் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களையும், கருத்தைக் கவரும் சிறுகதைகளையும், உணர்வை அள்ளும் கவிதைகளையும், புதுமை மணம் கமழும் கட்டுரைகளையும், ரசித்துச் சிரிக்கத் தக்க நகைச்சுவைகளையும், சமுதாயத்தில் புகழ் பெற்றோரின் பேட்டிகளையும், மக்களை ஆட்டிப்படைக்கும் திரைப்படங்களையும், நடிகர்–நடிகைகளைப் பற்றிய துணுக்குகளையும் நாட்டில் நடைபெறும் விந்தைமிகு செய்திகளையும் வெளியிடுகின்றன. இவை வாசகர்களை மகிழ்விப்பதோடு இதழ்களைக் கவர்ச்சியுடையனவாகவும் மாற்றுகின்றன.

இப்பொழுது பெரும்பாலும் செய்தித்தாட்கள் வார மலர்களும், திரைமலர்களும், சிறுவர்மலர்களும், சிறப்பு மலர்களும் இணைத்து வெளியிடுகின்றன. இவற்றினால் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் இதழ்களை விரும்பி, வாங்கிப் படிப்பதனைக் காண்கின்றோம்.

4. **வாணிபம் செய்தல்:** இதழ்கள் அச்சிடுவதே விற்பனை செய்வதற்காகத்தான். ஆதலால் இதழ்கள் வாணிப நோக்கத்தோடும் செயல்பட வேண்டியுள்ளது. ஓரளவு வருவாய் தேடிக் கொள்ளும் இதழ்களால் தான் தங்களது கால்களில் நின்று கொண்டு துணிச்சலாகக் கருத்துக்களைக்கூற முடியும். இதழ்கள் விளம்பரங்களை வெளியிடுவது ஒரு வகையில் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ளத்தான். குறைந்த விலையில் இதழ்கள் கிடைப்பதற்கு விளம்பர வருவாய் பெருமளவுதுணை செய்கின்றது. இதழ்களில் வெளிவரும் விளம்பரங்கள் நாட்டின் வாணிப வளர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன.

**வளர்ந்து வரும் பணிகள்:** இதழ்கள் இப்பொழுது அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், வாணிபம் செய்தல் ஆகிய நான்கு மரபு வழிப்பணிகளோடு பல புதிய பணிகளையும் காலச் சூழ்நிலைக்கேற்ப ஏற்றுக் கொண்டுள்ளன.


இன்றைய இதழ்கள் சமுதாய மாற்றத்திற்கு வழிகாட்டுகின்றன. நாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களின் சிறப்புக்களையும் குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றன. நல்ல மாற்றங்கள் வேரூன்றி வளர ஆக்கமும் ஊக்கமும் தருகின்றன. எடுத்துக்காட்டாக, தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை மறுப்பு, பெண் கல்வி எழுச்சி ஆகியவற்றிற்கு இதழ்கள் ஆற்றியிருக்கும் தொண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பகுப்புகளின் அடிப்படையில் இதழ்கள் 'அச்சு வழியில்' இடம் பெறுகின்றன.

## II. இதழ்களின் பகுப்பு

**அடிப்படை:** பொதுவாக அச்சிட்டு செய்திகளையும் (News), கருத்துக்களையும் (Views) பரப்ப வெளிவருகின்ற எல்லாவற்றையும் 'இதழ்கள்' (Journals) என்ற பொதுச் சொல்லால் குறிப்பிட்டாலும், அவை இயல்பாலும், வெளிவரும் காலத்தாலும், உள்ளடக்க கருத்துக்களாலும் தரத்தாலும், நோக்கங்களாலும், வேறுபடுகின்றன. இங்கு சிலகுறிப்பிடத்தக்க அடிப்படைகளில் இதழ்களை வகைப்படுத்தலாம்.

(i) **கால அடிப்படைப் பகுப்பு:** இதழ்களை அவை வெளிவரும் (மலரும்) கால அடிப்படையில் எப்படிப் பகுக்கலாம் என்பதை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




**நாளிதழ்கள்:** ஒவ்வொரு நாளும் வெளிவருவதை 'செய்தித் தாட்கள்' (News Papers), 'தினசரிகள்' (Dailies) என்று கூறலாம். இவை காலையில் வெளிவந்தால் 'காலை இதழ்' என்றும், மாலையில் வெளிவந்தால் 'மாலை இதழ்' என்றும் கூறுகின்றோம். வாரம் இருமுறையோ, மும்முறையோ வெளிவரும் இதழ்களையும், உலக நாடுகளின் கல்வி, சமுதாயம், பண்பாட்டு அமைப்பு (UNESCO), நாளிதழ்களாகவே கருதுகின்றது.

தமிழ் நாளிதழ்களில் காலை இதழுக்கு, 'தினத்தந்தி', 'தினமணி', 'தினகரன்' போன்றவற்றையும், மாலைவெளிவரும் இதழ்களுக்கு 'மாலைமுரசு', 'மாலைமலர்' ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

**பருவ இதழ்கள்:** ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் வருவதை 'கால இதழ்கள்' (Periodicals) அல்லது பருவ இதழ் (Magazines) என்று கூறுகின்றோம். வாரம் ஒருமுறை, திங்கள் இருமுறை, திங்கள் ஒரு முறை, காலாண்டுக்கு ஒரு முறை, அரையாண்டுக்கு ஒரு முறை, ஆண்டுக்கொருமுறை, என இதழ்கள் வெளிவருகின்றன.

வார இதழ்களுக்கு எடுத்துக்காட்டாக, 'ஆனந்த விகடன்', 'கல்கி', குமுதம், 'வாரந்திர ராணி', 'கிராம ராஜ்யம்', போன்றவற்றைக் கூறலாம்.

திங்களிருமுறை வெளிவரும் இதழ்களுக்குச் சான்றாக, 'வர்த்தகக் குரல்', 'வானொலி' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

திங்கள் இதழ்களில் சிறப்புப் பெற்றவை 'கலைமகள்', 'அமுதசுரபி', 'செந்தமிழ்ச் செல்வி', 'தாமரை' முதலியனவாகும்.

முத்திங்கள் இதழ்களுக்கு 'பாக்கியப் பரணி', 'மாணவர் தியானக் குறிப்பு'; அரையாண்டு இதழுக்கு 'ஆராய்ச்சி'; ஆண்டு இதழ்களுக்கு பள்ளி, கல்லூரிகள் வெளியிடும் ஆண்டு மலர்கள் ஆகியவற்றையும் சுட்டிக்காட்டலாம்.

**(ii) தன்மை (Quality) அடிப்படைப் பகுப்பு:** இதழ்களை அவை யாருக்காக வெளியிடப்படுகின்றன என்ற தன்மையின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் பகுக்கலாம்.

**1. தரமான இதழ்கள் (Standard Magazines):** ஆழமான பொருள் நிறைந்த, புலமைமிக்கவர்கள் படிக்கக் கூடிய இதழ்களை 'உயர்தரமான' இதழ்கள் என்று கூறலாம். ஆராய்ச்சி இதழ்கள் இப்படிப்பட்டவை. 'செந்தமிழ்ச் செல்வி' 'தென் மொழி', 'குறள்மலர்', 'ஆராய்ச்சி' ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.

**2. மக்கள் இதழ்கள் (People Magazines):** எல்லா வகையான மக்களும் எளிதாக, பொழுதுபோக்கு நோக்கில் படிக்கக் கூடியவற்றை மக்கள் இதழ்கள் எனலாம். தமிழில் வெளியாகின்ற பெரும்பாலான இதழ்கள் இந்த வகையைச் சார்ந்தவை.

*3. நச்சு இதழ்கள்* **:** படிக்கின்றவர்களின் உள்ளத்தைக் கெடுக்கும் வகையில் செய்திகளையும், கதைகளையும், கட்டுரைகளையும் கொண்ட இதழ்கள் சிலவும் வெளிவருகின்றன. இவற்றை 'மஞ்சள் இதழ்கள் (Yellow Journals) என்றும் கூறுவர். இவை 'சாக்கடை' போன்றவை. இவற்றால் சமுதாயத்திற்கு விளைகின்ற கேடுகளே மிகுதியாக இருக்கும்.

**(iii) உள்ளடக்க (Content) அடிப்படைப் பகுப்பு:** இதழ்களில் வெளிவருகின்ற செய்திகள், படைப்புகள் ஆகியவற்றில் எவை மேலோங்கியிருக்கின்றதென்ற அடிப்படையில் இதழ்களைப் பல்வேறு வகைகளில் பிரித்துப் பார்க்கலாம். அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1. பொழுது போக்கு இதழ்கள் (குமுதம், ராணி, கல்கி, ஆனந்த விகடன்)
2. அரசியல் இதழ்கள் (ஜனசக்தி, திராவிடநாடு, விடுதலை, அண்ணா)
3. இலக்கிய இதழ்கள் (செந்தமிழ்ச்செல்வி, எழுத்து, ஞானரதம்)
4. கவிதை இதழ்கள் (கவிதை, முல்லைச்சரம், குயில்)
5. சிறுவர் இதழ்கள் (அணில், கண்ணன், கோகுலம், அம்புலிமாமா)
6. அறிவியல் இதழ்கள் (கலைக்கதிர், விஞ்ஞான விவசாயம்)
7. மருத்துவ (உடல் நல) இதழ்கள் (நல்வழி, மூலிகைமணி)
8. கல்வி இதழ்கள் (கல்வி, ஆசிரியர் குரல்)
9. மகளிர் இதழ்கள் (சௌபாக்கியம், மங்கை)
10. தொழில் இதழ்கள் (மேழிச்செல்வம், ஏர் முரசு, நெசவாளி, பனைச்செல்வம்)
11. இல்ல இதழ்கள் (சக்திசர்க்கரை ஆலை செய்திமடல்)
12. கொள்கை விளக்க இதழ்கள் (கூட்டுறவு, கிராமராஜ்யம், சர்வோதயம்)
13. வாணிப இதழ்கள் (வணிகச் செய்தி, வர்த்தகர் உலகம்)
14. எழுத்தாளர் இதழ்கள் (பாரதி, எழுத்தாளன், தமிழ்ப்பாவை)
15. விளையாட்டு இதழ்கள் (ஒலிம்பிக்)
16. செய்தி இதழ்கள் (அமெரிக்கன் ரிப்போர்ட்டர், சோவியத் பலகணி)
17. சோதிட இதழ்கள் (மாத ஜோதிடம், அதிர்ஷ்டம்)
18. சமய இதழ்கள் (தர்ம சக்கரம், ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம், பூக்கூடை, திருக்கோயில்)
19. திரைப்பட இதழ்கள் (பேசும்படம், குண்டூசி, சினிமா கதிர், திரைஉலகம்)
20. பன்மொழி இதழ்கள் (திருமலை திருப்பதி தேவஸ்தான இதழ், ஸ்ரீ ரங்கநாத பாதுகா)

இதழ்கள் வெளியிடுபவர்கள் அதற்குரிய நெறிமுறைகளைப் பின்பற்றி வெளியிடும் பொழுது, நாட்டில்` இதழ் வெளியீடு முறைப்படுத்தப் பெற்ற துறையாக விளங்கும்.

***

## 13. செய்தித்தாள் நிர்வாக அமைப்பு

நாம் நாள்தோறும் பார்க்கின்ற, படிக்கின்ற செய்தித்தாள்கள் அன்றலர்ந்த மலர்களாக, புத்தம் புது செய்திகளோடு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளிவருகின்றன. குறுகிய காலத்தில் சிறப்பாக ஒரு செய்தித்தாள் வெளிவரவேண்டுமானால் அதன் நிர்வாக அமைப்புத் திறமையாக அமைய வேண்டும்.

"தற்காலச் செய்தித்தாள் என்பது மிகவும் சிக்கலான பல்வேறு முகப்புகளைக் கொண்ட அமைப்பாகும். அதனுடைய விருப்பங்களும் நடவடிக்கைகளும் முழு உலகையும் வளைத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் ஒரு நாடக மேடை; வாசகர்கள்தான் பார்வையாளர்கள் என்று கூறுவது மிகைப்படுத்தப்பெற்ற கருத்தாகாது. மிகப் பெரிய பணியைச் செய்கின்றதன் காரணமாக அது மிகப்பெரிய வாணிபமாகத்தான் இருக்கும்"[1] என்று ரெங்கசாமி பார்த்தசாரதி கூறுகின்றார். எந்த செய்தித்தாள் நிறுவனமும் இன்றுள்ள பண வீக்க போட்டி அங்காடி நிலையில், திறமையாகச் செயல்பட்டு ஆதாயம் தேடாவிட்டால், தொடர்ந்து நடைபெற இயலாது. ஆதலால் நாளிதழை நடத்துகின்றவர்கள் நிர்வாகத்தின் பல்வேறு கூறுபாடுகளையும், பிரிவுகளையும் அறிந்து செயல் படுதல் தேவையாகும்.

**துறைகள் :** வார இதழ்களிலும் சிறிய நாளிதழ்களிலும் பொதுவாக இரண்டு பிரிவுகள் இருக்கின்றன, ஒன்று 'அலுவலகம்' (office); மற்றொன்று 'பணிப்பிரிவு' (shop), அங்குதான் இதழை அச்சிடுவார்கள்.

நடுத்தர, பெரிய நாளிதழ்களில் பொதுவாக 'வாணிபப்பகுதி' (Business section), இயந்திரப் பகுதி (Mechanical section) 'ஆசிரியர் பகுதி' (Editorial Section) என்னும் மூன்று துறைகள் செயல்படுகின்றன, இவற்றைப் பொதுவாகப் பத்திரிகையாளர்கள் முறையே 'முன் அலுவலகம்' (The


---

1 Rangaswami Parthasarathy. 'Basic Journalism' Macmillan India Ltd. 1984 p.12.

ஆனால் நாளிதழ் ...
செயல்படுவது தேவையாகும்.

இப்பொழுது நன்கு வளர்ச்சிபெற்ற பெரிய செய்தித்தாட்களில் ஆறு பிரிவுகள் உள்ளன. இந்த நாளிதழ் அமைப்பு ... வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

## நாளிதழ் அலுவலக – நிர்வாக அமைப்பு




இந்தப் பகுதிகள் எப்படிச் செயல்படுகின்றனவென்பதைத் தனித்தனியாக விளக்கலாம்.

சுழலும் படிகளின் எண்ணிக்கை ஆகியவை இந்தப் பகுதியின் திறமையைச் சார்ந்து அமைகின்றன. நாளிதழ் விற்பனை, சுழல் பிரிவில் சில உட்பகுதிகள் செயல்படுகின்றன.

**1. நகரச் சுழல் பகுதி** (City Circulation): நாளிதழ் வெளியாகும் நகருக்குள் எவ்வளவு படிகள் விற்பனையாகின்றனவென்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இப்பிரிவு நகரின் பல்வேறு இடங்களிலும் உரிய காலத்தில் செய்தித் தாட்கள் கிடைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

**2. வட்டாரச் சுழல் பகுதி** (Area Circulation): நாளிதழ் குறுகிய காலத்தில் நாடு முழுவதும் கிடைக்க வேண்டும். அதற்கு வேண்டிய போக்குவரத்து ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அஞ்சல் வழி இதழ்களை அனுப்புவதும் இந்தப்பிரிவின் கீழ் தான் வரும்.

**3. கணக்கு பகுதி:** (Accounting Division) வாணிபப் பகுதியின் ஒரு பிரிவாகக் கணக்குப் பகுதி செயல்படுகின்றது. நாளேட்டின் எல்லாக் கணக்குகளையும் இந்தப் பகுதியில் வைத்துக் கொள்வார்கள். கணக்குத் தணிக்கையும் (Auditing) இப்பகுதியில் அடங்கும்.

## III. இயந்திரப் பகுதி
## (Mechanical Section)

இயந்திரங்களின் பகுதி முழுவதும் இயந்திரக் கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்படுகின்றது. பெரிய நாளிதழின் இயந்திரப்பகுதியில் பொதுவாக ஐந்து பிரிவுகளைக் காணலாம்.

**(i) அச்சுக் கோர்க்கும் முறை:** (Composing Room): ஆசிரியப் பகுதியிலிருந்து அச்சிட வருகின்ற எல்லாவற்றையும் இங்கு அச்சுக் கோர்ப்பார்கள். எந்த வகை அச்செழுத்துக்களில் அச்சடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தால் அதன்படியே அச்சுக்கோர்ப்பார்கள். பெரிய நாளிதழ்களில் தானே அச்சுக் கோர்க்கின்ற எந்திரங்களும் (Lino Type) இருக்கின்றன.

**(ii) அமைப்புப் பகுதி** (Stero Type Department): அச்சுக் கோர்த்தவற்றை அச்சடிப்பதற்கு முன்னால், பக்கங்களாக மாற்றி, மிக விரைந்தச்சடிக்கும் சுழல் அச்சு இயந்திரங்களில் (Rotary Presses) அமைப்பதைத் தனிப்பகுதியினர் கவனிக்கின்றனர்.



**(iii) படங்களைச் செதுக்கும் பிரிவு** (Engraving Department): புகைப்படங்களையும், வரைந்த ஓவியங்களையும் அச்சிட வேண்டுமானால், அவற்றைச் செதுக்கி அச்சுக் கட்டைகள் (Blocks) தயாரிக்க வேண்டும். சிறிய இதழ்கள் இத்தகைய கட்டைகளைக் கூலி கொடுத்துச் செய்து வாங்கும் பெரிய இதழ்கள் படங்களைச் செதுக்குவதற்காகத் தனித் துறையினை வைத்திருக்கின்றன.

**(iv) அச்சடிக்கும் அறை:** (Press Room): சுழல் அச்சு இயந்திரங்கள் வியக்கத்தக்க முறையில் செய்தித் தாட்களை அச்சிடுகின்றன. அச்சடிப்பது மட்டுமின்றி, அச்சிட்ட இதழ்களை வெட்டி, மடக்கி, கட்டுகின்ற வரை இயந்திரங்கள் செய்கின்றன.

**(v) மெய்ப்புத் திருத்தும் பகுதி** (Proof Desk): அச்சு அடிப்பதற்கு முன்னால் அச்சுக் கோர்த்தவற்றைப் படி எடுத்து, அதனைச் சரிபார்ப்பார்கள். இப்படித் திருத்துவது இதழ்கள் தரமாக வெளி வரத் துணை செய்கின்றது.

## IV. வளர்ச்சிப் பகுதி
## (Promotion Section)

நாளிதழ்களின் வளர்ச்சியைக் கவனிக்கத் தனித்துறை செயல்படுகிறது. நாளிதழ்கள் அவற்றில் வெளியிடுகின்ற விளம்பரங்களின் மூலம் மற்ற துறைகளின் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது. அதே விளம்பர முறையைப் பின்பற்றி நாளிதழ் தன்னை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும்.

விளம்பரங்களின் மூலம் இதழ்கள் வெளிவருவதைப் பொது மக்களுக்கு அறிவிக்கலாம். இதழ்கள் தங்களிடம் உள்ள சிறப்புப் பகுதிகளை எடுத்துரைக்கலாம். வாசகர்களின் கவனத்தைக் கவரும் வகையில் இதழ்களைப் பற்றிக் கூறினால் இதழ்களின் விற்பனை கூடும்.

## V. புள்ளிவிவரப் பகுதி
## (Data Processing Department)

இதழினைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்து வைப்பது இதழின் வளர்ச்சிக்குத் துணை செய்யும். வெளிநாடுகளில் புள்ளி விவரங்களை சேகரித்து வகைப்படுத்தி தொகுத்து வைப்பதற்குத் தனிப்பகுதியை வைத்திருக்கின்றனர்.

# 15. செய்தி
## (NEWS)
### I. செய்தி–விளக்கம்

செய்தித்தாளின் மூலப்பொருள் 'செய்தி'. செய்தி இல்லையேல் செய்தித்தாள் இல்லை. செய்தி என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் செய்தியைப் புரிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

***ஆங்கிலச் சொல்:*** செய்தி என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலத்தில் 'நியூஸ்' (News) என்கின்றோம். 'நியூஸ்' என்ற சொல்லில் இரண்டு பொருள்கள் உள்ளன.

(i) 'நியூ' (New) என்றால் 'புதியது' என்று பொருள். இதனைப் பன்மையில் கூறும் பொழுது 'நியூஸ்' அதாவது 'புதியன' என்று பொருள்படுகின்றது.

(ii) 'நியூஸ்' (News) என்ற ஆங்கிலச் சொல் நான்கு ஆங்கில எழுத்துக்களால் உருவானது. நான்கு ஆங்கில எழுத்துக்களும் நான்கு திசையைக் குறிக்கின்றன. 'என்' (N) என்ற எழுத்து 'வடக்கையும்' (North), 'இ' (E) என்ற எழுத்து கிழக்கையும் (East), 'டபிள்யூ' (W) என்ற எழுத்து 'மேற்கையும்' (West), 'எஸ்' (S) என்ற எழுத்து தெற்கையும் (South) குறிக்கின்றன. அதாவது, நான்கு திக்குகளிலிருந்தும் கிடைப்பது செய்தி என்ற பொருளில் அதற்குரிய சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல் உருவானதாகக் கூறுவார்கள்.

***தமிழ்ச் சொல்:*** 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்புப் போல 'செய்தி ' என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தினாலும் அதற்கும் தமிழில் தனிப் பொருள் கூறலாம். செய்தி என்ற சொல்லை, செய் + தி என்று பிரித்தால் 'செய்' என்ற பகுதி, 'செய்தது, செய்வது' என்று தொழிலைக் குறிக்கின்றது. ஆதலால், 'தி' என்ற விகுதி சேர்ந்து, 'செய்தி' என்ற தொழிலாகு பெயராகுகின்றது என்றும் கூறலாம்.

'செய்ததோ, செய்கின்றதோ, செய்வதோ' தான் செய்தியாகின்றது. எங்கு எது நடந்தாலும் அது உடனே செய்தியாகக் கருதப்படுகின்றது. செய்யப்படாதது எதுவும் செய்தியாவதில்லை.

***அகராதி விளக்கம்:*** புகழ்பெற்ற சேம்பர்ஸ் அகராதி (Chambers Dictionary) 'நியூஸ்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு

## IV. செய்திகளின் வகைகள்

செய்திகளை அவற்றின் தன்மையை ஒட்டிப் பலவகையாகப் பகுப்பது (Classification) உண்டு. அவற்றில் தலையாய பகுப்புக்களை விளக்கலாம்.

**(i) எதிர்பார்க்கும் செய்திகள்; எதிர்பாராத செய்திகள்:** ஒன்று இப்பொழுது நடைபெறும் என்பதை அறிந்திருப்போம். அது நடைபெறும் பொழுது எதிர்ப்பார்த்த செய்தியாகின்றது. ஆதலால் அதனை **எதிர்பார்க்கும் செய்தி** (Predictable News) என்கிறோம். தேர்தல் நடைபெறுவது, தலைமையமைச்சர் வருகை, பலத்த மழைக்குப் பிறகு வெள்ளம் வருதல் ஆகியவை எதிர்பார்க்கும் செய்திகள்.

யாரும் சிறிதும் எதிர்பாராத நிலையில் நடைபெறுவது **எதிர்பாராத செய்தி:** (Unpredictable News) இரயில் விபத்து, புயலடித்தல், அரசியல் தலைவரின் கொலை போன்றவை இப்படிப்பட்டவை.

**(ii) நேரடிச் செய்தி; விளக்கச் செய்தி:** ஒன்று எப்படி நடைபெற்றதோ அதனை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல வெளியிடுவது **நேரடிச் செய்தி** (Straight). சட்டமன்ற அவைத்தலைவர் சில உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்ததை அப்படியே நடந்தது நடந்தபடி கூறினால் நேரடிச் செய்தி. ஆனால், நடந்ததை விளக்கும் பொழுது, என்ன காரணங்களினால் சட்டமன்ற அவைத்தலைவர் அந்த நடவடிக்கை எடுத்தாரென்றும், அதற்கு அவருக்கு அதிகாரம் உண்டாவென்பதையும் சேர்த்து செய்தியாக வெளியிடுவது விளக்கச் செய்தி (Explanatory News) எனப்படும்.

**(iii) கடினமான செய்திகள்; மெதுவான செய்திகள்:** அமெரிக்காவில் செய்திகளை கடினமான செய்திகள் (Hard News), மெதுவான செய்திகள் என்றும் பிரிக்கின்றனர். மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டாத, அலசி ஆராயும் விவரமான செய்திகள் கடினமான செய்திகளாகும். நிதியமைச்சரின் வரவு–செலவுத் திட்டம். அறிவியலறிஞர்களின் மாநாட்டுச் செய்திகள் போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை.

உடனடியாக வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுபவை மெதுவான செய்திகளாகும் (Soft News). திரைப்பட வெளியீடு, தேர்தல் முடிவுகள் போன்றவற்றை மெதுவான செய்திகளாகக் கருதலாம். ஆனால் இவற்றைச் சூடான செய்திகள் (Hot News) என்றும் கூறுவதுண்டு.

மேலும் செய்திகளைப் புலனாய்வுச் (Investigative News) தொடர் செய்திகள் செய்திகள் என்றும் வகைப்படுத்துவதுண்டு.

## V. செய்தி மூலங்கள் (Sources of News)

செய்தியாளர் எது செய்தி என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பதைப் போல, அவை எங்கு கிடைக்கும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். பொதுவாக எங்கும் எப்பொழுதும் செய்திகள் கிடைக்கலாம். என்றாலும், சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றால் செய்திகளைப் பெற இயலும். அப்படிப்பட்ட இடங்களை செய்தி 'மூலங்கள்' எனலாம்.

நடைமுறையில் செய்தியாளர்கள் செய்திகளைப் பெறும் இடங்களைச் சுட்டிக் காட்டலாம். அவை :—

1. அரசுச் செய்திகளைப் பெறும் இடங்கள் — குடியரசுத் தலைவர், தலைமையமைச்சர் அலுவலகங்கள் — அமைச்சகங்கள், அரசுத் துறைகள்; முதலமைச்சர் அலுவலகம்; மாநில அரசுத் துறைகள்.

2. அரசியல் செய்திகள் — கட்சித் தலைமையகங்கள் — அரசியல் கூட்டங்கள்.

3. குற்றச் செய்திகள் — காவல் நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், குற்றவியல் நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

4. சமுதாய நடவடிக்கைகள் — ஊராட்சி அலுவலகங்கள், போக்குவரத்து நிலையங்கள், பொதுக்கூட்டங்கள் பொருட்கள் பகிர்வு இடங்கள்.

5. வழக்குகள் தொடர்பானவை — உயர்நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள்.

6. வாணிப நிறுவனங்கள், அங்காடிகள், பங்கு அங்காடி மையங்கள்.

7. விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள்.

8. அரசு விருந்தினர் விடுதிகள்; பெரிய உணவகங்கள்.

9. சுற்றுலா மையங்கள்

10. தட்ப, வெப்பநிலை, மழை அறிவிப்பு நிலையங்கள்

11. துறைமுகங்கள்

12. சமய நிறுவனங்கள், கோவில்கள்

13. திரைப்படம் எடுக்கும் நிலையங்கள், வெளியிடங்கள்

14. புகைவண்டி நிலையங்கள்

# 33. தலையங்கம்

ஓரிதழில் – அது நாள், வார, திங்கள், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழாக இருந்தாலும் – தலையங்கம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. எல்லா ஆங்கில இதழ்களிலும் தலையங்கத்தைக் காணலாம்.

தற்காலத்தில் தமிழில் வெளிவரும் நாளிதழ்களில் சில தலையங்கம் இல்லாமலேயே , வெளிவருகின்றன. எப்பொழுதாவது அவற்றில் தலையங்கம் வெளிவரும். ஆனால், ' தினமணி' போன்ற சிலவற்றில் நாள்தோறும் தவறாமல், தலையங்கம் வெளிவருகின்றது.

தலையங்கத்தை எல்லா வாசகர்களும் படிப்பதில்லை. ஓரிதழின் வாசகர்களில் ஏறத்தாழ 15 சதவிகித வாசகர்கள் தான் தலையங்கத்தைப் படிப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

ஜான் ஹோஹன்பர்க் (John Hohenberg) என்பவர். 'செய்தித்தாளில், மிகவும் புறக்கணிக்கப் பெறுகின்ற, குறைவாக மதிப்பிடப் பெறுகின்ற பகுதி தலையங்கமாகும். ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட அமெரிக்க நாளிதழ்கள் தலையங்கம் வெளியிடுவதில்லை. இருந்தாலும், பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் இதழியலின் ஒரு தலையாய கருவியாக இது இருக்கின்றது," என்கின்றார்.

நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கத்தின் சமுதாயப் பயனை நினைத்துப் பார்த்தால், அதன் முக்கியத்துவம் விளங்கும்.

**பயன்பாடுகள் :** இதழியல் வல்லுநர்கள் ஒவ்வொரு இதழிலும் தலையங்கம் இடம்பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றனர். "எண் சாண் உடம்பிற்கு சிரசே (தலையே) பிரதானம்" என்பது போல், தலையங்கம், இதழில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

எம்.வி. காமத் தலையங்கம் பற்றி, "தலையங்கத்தைச் செய்தித்தாளின் கருத்துக் கண்ணாடி என்றும், மிகப்பெரிய, அழிவற்ற ஆன்மா என்றும், அதனுடைய மனச்சான்று என்றும் பெரிதாகப் போற்றுகின்றனர் என்றும், "ஒரு நல்ல தலையங்கம் செயலைத் தூண்டுகின்றது. பணிகளை முடுக்குகின்றது. சட்டத்தைத் திருத்துகின்றது. புரட்சியைத் தோற்றுவிக்கின்றது" என்றும் கூறுகின்றார்.

# 26. செய்தி ஆசிரியர்
## (News Editor)

மிகப்பெரிய செய்தித்தாட்கள் தனியாக செய்தி ஆசிரியர் ஒருவரைப் பொறுப்பில் வைத்திருக்கின்றன. பத்திரிகையின் முக்கியமான பணியாளர்களில் ஒருவராகச் செய்தி ஆசிரியர் விளங்குகின்றார். செய்தித்தாளைத் திட்டமிட்டு உருவாக்குவதில் ஆசிரியருக்குத் தோன்றாத் துணையாக இருப்பவர் செய்தி ஆசிரியர்.

**இன்றியமையாப் பணி** : ஒரு செய்தித்தாளின் முதுகெலும்பாகச் செய்தி ஆசிரியர் அமைகின்றார். ரெங்கசுவாமி பார்த்தசாரதி, " ஆசிரியரின் கண்களாகவும், காதுகளாகவும் செய்தி ஆசிரியர் இருக்கின்றார். ஏனென்றால் உலகெங்கும் இருந்து முடிவற்ற நீரோடை போன்று வந்து கொட்டுகின்ற செய்திகளை முறைப்படுத்தி, முற்றுப்பெற்ற பொருளாக, இலட்சக்கணக்கான வாசகர்கள் காலை காபி அருந்தும் பொழுது பெறக்கூடிய தகவலாகவும் கல்வியாகவும் கிடைக்கும் வகையில், செய்தித்தாளில் வெளியிடச் செய்பவர் செய்தி ஆசிரியரே. அவர் ஆசிரியரின் மனச்சான்றின் கண்காணிப்பாளராகத் திகழ்கின்றார். ஆசிரியரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றவராக, செய்தித்தாளை உருவாக்கும் பொழுது எந்தவகை மோதலையும் கருத்து வேறுபாட்டையும் தவிர்ப்பவராக செய்தி ஆசிரியர் இருக்க வேண்டும்"[1] என்று கூறுகின்றார்.

செய்தி ஆசிரியரின் சிறப்பான இடத்தைச் சுட்டிக் காட்டும் வகையில், "ஒரு தேசிய செய்தித்தாளுக்கு சுறுசுறுப்பான, அறிவாற்றல் மிக்க, முயற்சியுடைய செய்தியாசிரியர் முக்கிய ஒளிச்சுடராக, மொத்தச் செய்தியின் பரப்பிற்கும், கண்ணோட்டத்திற்கும் சக்தியளிப்பவராக

---

*1* Rangaswami Parthasarathy, 'Basic Journalism', Macmillan India Ltd., Delhi, 1984, P. 16

அல்லது அவரது உதவியாளரோ பங்கு பெறுவர். பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும், பட ஆசிரியரும், கேலிப் படம் வரைபவரும், விற்பனைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் பங்கு பெறுவார்கள். இக்கூட்டத்தில் வெளிவந்த இதழை மதிப்பிட்டு விட்டு புதிய இதழ் எப்படி அமைய வேண்டுமென்பதையும் தீர்மானிப்பார்கள்.

செய்தி ஆசிரியர் அரசின் பல்வேறு துறைத்தலைவர்களோடும், சமுதாயத்தில் முக்கியமானவர்களோடும் பல்வேறு செய்தி மூலங்களோடும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

**இரவுச் செய்தி ஆசிரியர்** : நாளிதழ்களில் இரவில் வரும் செய்திகளைக் கவனிக்கத் தனியாக இரவுச் செய்தி ஆசிரியர் (Night News Editor) ஒருவர் இருப்பார். பகலில் பணியாற்றுகின்ற செய்தி ஆசிரியரை விட இவரது பணிகள் கடுமையானவைகளாக இருக்கும். எப்பொழுதும் நேரத்தோடு போராடுகின்ற நிலையில் தான் இவரது பணி அமையும்.

பல நேரங்களில் செய்தித்தாளின் அச்சுப்பணி முடிந்து அது வெளிவரும் வேலையில்தான் ஏதாவது ஒரு பெரிய செய்தி வெளிவரும். ஒரு பெரிய தலைவரின் மரணம் பற்றியோ, விமான விபத்துப் பற்றியோ, ரெயில் கவிழ்ப்புப் பற்றியோ திடீரென்று நள்ளிரவில் செய்தி வரும். முதலில் தொலைபேசியில் செய்திகளைத் திரட்டி கடைசிச் செய்தியாக முக்கியமானவற்றை அன்றையச் செய்தித்தாளில் வெளியிட முயல வேண்டும். செய்தியாளர்களை அனுப்பி முழு விவரங்களையும் திரட்டி, மறுநாள் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பகலில் பணியாற்றும் செய்தி ஆசிரியருக்கும் இரவில் பணியாற்றும் செய்தி ஆசிரியருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். சில செய்திகள் தொடர்வனவாக இருக்கும். அவற்றை இருவரும் கவனித்து, செய்தியினைத் தொடர்ந்து வெளியிட ஆவன செய்ய வேண்டும்.

## 27. துணையாசிரியர்கள் (Sub-Editors)

ஒவ்வொரு செய்தித்தாளிலும் அதன் அளவிற்கேற்பத் துணையாசிரியர்கள் பணி செய்கின்றனர். இவர்கள் செய்தித்தாளின் காரியங்கள் யாவிலும் கைகொடுப்பவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு துணையாசிரியரும் ஏதாவது ஒரு பகுதிக்குப் பொறுப்பேற்றிருப்பார். இவர்களை வெளி உலகம் அறிவதில்லை. உடம்புக்குள் இருக்கும் எலும்புகள் போல இவர்கள் செய்தித்தாள் அமைப்பிற்கு உறுதியளிப்பவர்களாக இருப்பார்கள்.

உதவி ஆசிரியர்களை, மாநிலச் செய்தி ஆசிரியர் (State Editor), நகரச் செய்தி ஆசிரியர் (City-Editor), செய்தி ஆசிரியர் (News Editor), ஞாயிறு மலர் ஆசிரியர் (Sunday Editor), கலைப்பிரிவு ஆசிரியர் (Art Editor) விளையாட்டுப் பகுதி ஆசிரியர் (Sports Editor) என்று பல பெயர்களில் அழைப்பார்கள்.

**முக்கியத்துவம்** : துணையாசிரியர்தான் செய்திகளையும், பிறவற்றையும் பதிப்பிக்கும் வகையில் செப்பனிட்டுத் தருகின்றார். ஆசிரியரைச் செய்தித்தாள் என்ற கோபுரத்தின் கலசமாகக் கொண்டால், துணையாசிரியரை அடித்தளக் கல்லாகக் கருதலாம்.

துணையாசிரியரை, "அவர் ஒரு படைப்புக் கலைஞர்"[1], என்று எம்.வி. காமத் வர்ணிக்கின்றார்.

நார்த்கிளிப் (Northcliffe) என்பவர் "செய்தியாளர்கள் செய்தித்தாளை எழுதுகின்றார்கள்; துணையாசிரியர்கள் அதனை உருவாக்குகின்றார்கள்", என்கின்றார்.

நேவின்சன் (H.W. Nevinson), "எந்த முட்டாளும் எழுதலாம். ஆனால் அதனைச் செப்பனிட சொர்க்கத்தில் பிறந்த ஒரு மேதை தேவை," என்று கூறுகின்றார்.

"பத்திரிகை உலகின் மேல்மட்ட அறிவாளிகள்தான் துணையாசிரியர்கள். மக்களிடம் பெயர் பெற்றிருக்கும் செய்தித்தாளுக்குக் கவர்ச்சியையும், சுவையையும் அந்த அறிவார்ந்த குழுவினர் வழங்குகின்றனர். செய்தித்தாளின் நடையின் மேம்பாட்டையும் தரத்தையும் அவர்களே உருவாக்குகின்றனர்"[2] என்று ரெங்கசுவாமி பார்த்தசாரதி குறிப்பிடுகின்றார்.

**தகுதிகள்** : செய்தியாளர் ஏதாவது ஒரு துறையில் வல்லவராக இருந்தால் போதும். ஆனால் துணையாசிரியர், பல்வேறு வகையான பணிகளைச் செய்வதால் 'பல்துறை வித்தகராக' விளங்க வேண்டும்.

ஜார்ஜ் C. பாஸ்டியன், லேலாண்டு டி.கேஸ், பிளாய்டு கே பாஸ்கெட்டே ஆகியோர் உதவி ஆசிரியருக்கு கீழ்க்கண்ட ஒன்பது இயல்புகள் இருக்க வேண்டுமென கூறுகின்றனர்.[3]

1 M.V. Kamath, 'Professional Journalism,' Vikas Publishing House Pvt. Ltd New Delhi, 1980, P. 33.

2 Rangaswami Parthasarathy, 'Basic Journalism', Macmillan India Ltd., Dell 1984, P. 16

3 George C. Bastian, Lelant D Case, Floyd K. Baskette 'Editing The Days New P. 26

1. துணையாசிரியரிடம் மிகவும் நுட்பமான இருவகை அறிவாற்றல் இருக்க வேண்டும். விவரங்களைக் கவனமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்ற பொழுதே, அது ஒட்டு மொத்தமாக எப்படி இருக்கின்றதென்பதையும் கவனிக்க வேண்டும்.

2. நல்ல துணையாசிரியர் நல்ல ஆங்கிலத்தில் (மொழியில்) எழுதக் கூடியவராக இருக்க வேண்டும். நல்ல மொழி நடையில் அமையாதவற்றை அவர் செப்பனிட வேண்டும்.

3. நாட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளையும் அவற்றின் போக்குகளையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

4. அவர் பணியாற்றும் செய்தித்தாளைப் பற்றியும், அதன் கொள்கைகள் பற்றியும் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.

5. எல்லா நேரங்களிலும் அவர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

6. அவருக்கு நூற்கள், நாடகங்கள், செய்தித்தாட்கள், மதிப்புரைகள், சட்டம், அரசின் அமைப்பு முறை, இடங்களின் பெயர்கள், அரசியல் மற்றும் சமுதாயத் தொடர்புகள், புவியியல், வரலாறு, மனித இயல்பு, வாழ்க்கை ஆகியவை பற்றி எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

7. இலக்கியத்தின் தகுதி, செய்தியின் தகுதி ஆகியவற்றை உணர்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.

8. சின்னஞ்சிறு விவரங்களையும் அறிந்தவராக அவர் இருக்க வேண்டும்.

9. பொது அறிவை மேல்நிலையில் பெற்றிருப்பவராக அவர் திகழ வேண்டும்.

துணையாசிரியர் ஒரு வழக்குரைஞரைப் போல எதனையும் துருவி ஆராய்ந்து, விரைவாக ஒரு முடிவுக்கு வரும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். செய்தியாளர்கள் அனுப்பிய செய்தியைப் படிக்கின்ற பொழுதே அதில் முக்கியமானவை எவை வெட்டப்பட வேண்டியவை எவை என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

துணையாசிரியர் நன்கு கற்றவராக, சமுதாயத்தை நன்கு புரிந்து கொண்டவராக இருக்க வேண்டும். மக்களின் விருப்பு, வெறுப்புகளை உணர்ந்து செய்தியினை அமைக்க வேண்டும்.

செய்தியாளரின் செய்தியைப் படிக்கின்ற பொழுதே, அதன் கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டும், வாசகர்களிடம் அது என்ன விளைவினை ஏற்படுத்தும் என்பனவற்றை ஊகித்துணர வேண்டும்.

மிக நீண்ட அறிக்கையை, அதனுடைய முக்கியக் கருத்துக்களை விட்டுவிடாமல் சுருக்கித்தருகின்ற ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.

செய்தி சரியானதுதானா என்பதை அறிந்து கொள்வதில் கண்ணாக இருக்க வேண்டும். ஐயப்பாட்டிற்குரியனவற்றை வெளியிடக் கூடாது.



துணையாசிரியர் தன்னை ஒரு தனி மனிதனாக கருதக் கூடாது. தான் ஓர் அணியைச் சேர்ந்தவர் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும்.

துணையாசிரியருக்கு நல்ல உடல் நலம் வேண்டும். நீண்ட நேரம் உழைக்கக் கூடிய உடல் உறுதியும் மனப்பான்மையும் தேவை. எடுத்த பணியை தொடுத்து விரைந்து, சரியாக முடிக்கக் கூடியவரே சிறந்த துணையாசிரியராக விளங்குவார்.

பொதுவாக, "(1) எழுத்து நடையோடு நெருங்கிய தொடர்பு; (2) ஏராளமான தன்னம்பிக்கை; (3) போதுமான மன முதிர்ச்சி; (4) ஐயப்பாட்டுடன் பார்த்துத் தீர்மானிக்கும் பண்பு; (5) விரிவான அறிவாற்றலும் ஆர்வமும் (6) உறுதியான மன நிலை" ஆகிய ஆறு இயல்புகளும் துணையாசிரியருக்குக் கட்டாயம் தேவை என்று கூறுவார்கள்.

**கடமைகளும் பணிகளும்** : செய்தி ஆசிரியர் ஒதுக்குகின்ற பணிகளைத் துணையாசிரியர் உரிய காலத்தில் செய்து தர வேண்டும். பொதுவாக ஒரு துணையாசிரியரிடமிருந்து எதிர் பார்க்கின்ற பணிகளைத் தொகுத்துக் கூறலாம்.

(i) **செய்தியை உருவாக்கிச் செப்பனிடல் :** துணையாசிரியரின் முதன்மையான பணி, அவரிடம் கொடுக்கின்ற செய்திப் படியைப் படித்து, அதில் வேண்டாதவற்றை ஒதுக்கித்தள்ளி, அதன், செய்தி மதிப்பை உணர்ந்து, வெளியிடத் தக்கவகையில் செய்தியாக வடிவமைத்துக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு செய்திக்கும் எவ்வளவு இடம் ஒதுக்கப்பட இயலும் என்பதை அறிந்து செய்திக்கு இறுதி வடிவம் கொடுக்க வேண்டும். சில வேளைகளில் செய்தியாளரிடமிருந்து வந்த செய்தி, துணையாசிரியர் செப்பனிட்ட நிலையில், தன்னுடைய உருவத்தை இழந்து, செய்தியாளரே இனங்காண முடியாத நிலையில் உருமாறி வெளிவரலாம். ஆதலால்தான் செய்தியாளர்கள் துணையாசிரியர்களை, "செய்திக் கொலைகாரர்கள்" என்றும், "இறைச்சிக் கடைக்காரரைப் போல இரக்கமற்ற செய்திகளை வெட்டி உருவத்தைச் சிதைப்பவர்கள்", என்றும் குறை கூறுகின்றனர்.

**துணையாசிரியர்** செப்பனிடும் (Editing) தனது பணியைச் செய்கின்றபொழுது, **கீழ்க்கண்ட ஐந்து அடிப்படை**[4] **விதிகளைப்** பின்பற்ற வேண்டுமென ரெங்கசுவாமி பார்த்தசாரதி கூறுகின்றார் : –

---

4 Ibid. p. 92

இந்த நிறுவனம் பல்கேரியா, ருமேனியா, கிரீசு, ரஷ்யா, துருக்கி போன்ற பல்வேறு நாடுகளிலும் கிளைகளை அமைத்துக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டது. இந்த வகையில் உலகச் செய்தி நிறுவன அமைப்பிற்கு இது முன்னோடியாகத் திகழ்ந்தது என்று கருதலாம்.

முதல் உலகப்போருக்குப் பின் இதனுடைய வளர்ச்சி குன்றியது. ஹிட்லரின் கண்பார்வையில் இது கருகி வாடி விட்டது.

***ராய்ட்டர் நிறுவனம்:*** ஹாவாஸ் செய்தி நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றிய பால் சூலியஸ் ராய்ட்டர் என்ற ஜெர்மானிய யூத இளைஞர் 1851 இல் இலண்டனில் வாணிபச் செய்திகளைத் திரட்டித்தர ஒரு செய்தி நிறுவனத்தை அமைத்தார். முதலில் இவருக்குச் செய்தித்தாட்களின் ஆதரவு கிடைக்கவில்லை. முன்பே செய்தி திரட்டுவதில் இவர் பெற்றிருந்த அனுபவம் இவரது வளர்ச்சிக்கு உற்ற துணையாகியது. 1856க்குப் பிறகு டைம்ஸ் போன்ற இலண்டன் இதழ்கள் இவரிடமிருந்து செய்திகளைப் பெற்றன. அதன்பிறகு இவரது நிறுவனம் விரைந்து வளர்ந்தது. ஹாவாஸ், உல்ப் ஆகியவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, தனது நிறுவனம் உலக நிறுவனமாக வளர சூலியஸ் ராய்ட்டர் பாடுபட்டார்.

ராய்ட்டர் நிறுவனம் 1915 வரை தனிக்குடும்பச் சொத்தாக இருந்தது. அதன்பின்பு கூட்டுப் பங்கு நிறுவனம் ஆயிற்று. 1941முதல் சில இதழ்களின் சங்கங்கள் இணைந்து நடத்தும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகின்றது.

## II. உலகச் செய்தி நிறுவனங்கள்

இப்பொழுது நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செய்தி நிறுவனங்கள் அமைந்துள்ளன. இவை எல்லாம் தொழில் நுட்ப, அறிவியல் வளர்ச்சியின் விளைவாக, கடந்த சில ஆண்டுகளாகக் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளன. அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் விளக்கலாம்.

***அமெரிக்காவின் அசோசியேடட் பிரஸ் (Associated Press of America):*** இந்த நிறுவனத்தை 1848இல் நியூயார்க் நகரிலிருந்த ஆறு செய்தித்தாட்கள் இணைந்து, ஆதாய நோக்கமின்றி, கூட்டுறவு செய்தி நிறுவ்னமாக அமைந்தன. தொடக்க காலத்தில், இது உறுப்பினர்களுக்கு மட்டுமே செய்திகளை வழங்கியது. ஆனால் 1943இல் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எல்லாச் செய்தித்தாட்களுக்கும் செய்திகளை வழங்குகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் இந்த **'AP நிறுவனம்'** மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது. உலகத்தில் மிகப்பெரிய செய்தி நிறுவனங்களில் ஒன்றாக இருக்கும் இந்த நிறுவனம் 1977இல் 108 உலக நாடுகளுக்குச் செய்தி வழங்கியது. அமெரிக்காவில் மட்டும் 1,320 செய்தித்தாட்களும் 3,400 ஒலிபரப்பு நிலையங்களும் இதன் உறுப்பினராக இருந்தன.

இந்த நிறுவனம் அமெரிக்காவில் 107 நகரங்களில் செய்தியாளர்களை வைத்திருக்கின்றது. 60 வெளிநாடுகளில் இது செய்திகளைச் சேகரிக்கின்றது.

**ராய்ட்டர் (Reuter) :** 1850இல் பிரான்சில் தொடங்கப்பெற்ற இந்த நிறுவனம் 1851–இல் இலண்டனுக்குச் சென்றது. முதலில் தனிக் குடும்பச் சொத்தாக இருந்த இந்த நிறுவனம் இப்பொழுது நான்கு பத்திரிகை நிறுவனங்களுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. இந்தப் பத்திரிகை அமைப்புகள் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளோடு தொடர்பு கொண்டவை.

ராய்ட்டர் உலகச் செய்தி நிறுவனமாகச் செயல்படுகின்றது. இது 60 நாடுகளில் அலுவலகம் வைத்திருக்கின்றது; 130 பகுதிகளுக்குச் செய்திகளை வழங்குகின்றது.

**ஏஜென்சி பிரான்சு பிரஸ் (Agence France Press):** 1835இல் சார்லஸ் ஹாவாஸ் நிறுவிய ஹாவாஸ் செய்தி நிறுவனத்தின் தொடர்ச்சியாக 1944 முதல் இந்த நிறுவனம் செயல்படுகின்றது. முதல் உலகச் செய்தி நிறுவனம் என்ற பெருமைக்குரிய ஹாவாஸ். 1940இல் பிரெஞ்சு அரசு இதனை விலைக்கு வாங்கி நடத்தியது. பின்னர் ஜெர்மானியர்கள் இதனைக் கைப்பற்றினர். பிரெஞ்சுக்காரர்களின் போராட்டத்தின் விளைவாக தலைமறைவு செய்தி நிறுவனங்கள் தோன்றின. சுதந்திர பிரெஞ்சுக்காரர்கள் (Free French) ஏஜென்சி பிரான்காய்ஸ் இன்டிபெண்டின்ட்ஸ் (Agence Francaise Independents) என்ற அமைப்பினை இலண்டனில் நிறுவினர். இவற்றிலிருந்து 1944இல் ஏஜென்சி பிரான்சு பிரஸ் (AFP) உருவானது. இதற்கு ஆண்டுதோறும் அரசு மானியம் வழங்கியது.

1957 முதல் சட்டத்தின் மூலம் இதனைத் தனித்தியங்கும் நிறுவனமாக மாற்றினார். இதனுடைய நிர்வாகத்தில் பிரெஞ்சு செய்தித்தாள்களும், வானொலி, தொலைக்காட்சியினரும் பொதுமக்களின் சார்பாளர்களும், செய்தி நிறுவனத்தின் ஊழியர்களும் பங்கு பெறுகின்றனர்.

இந்த நிறுவனம் 167 நாடுகளில் தனது அமைப்பினை வைத்திருக்கின்றது. 152 நாடுகளுக்குச் செய்திகளை பிரெஞ்சு, ஆங்கிலம்,



ஸ்பானிய, ஜெர்மானிய போர்ச்சுகீசிய, அராபிய மொழிகளில் வழங்குகின்றது.

**யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல்** (United Press International): 1907இல் தொடங்கப் பெற்ற ஸ்கிரிப்ஸ் யுனைடெட் பிரஸ் அசோசியேசன் (Scripp's United Press Association), 1909 இல் நடைபெற்ற ஹர்ஸ்ட்ஸ் இன்டர்நேஷனல் நியூஸ் சௌ்வீஸ் (Heart's International News Service) ஆகிய நிறுவனங்களை இணைத்து 1958இல் யுனைடெட்பிரஸ் இன்டர்நேஷனல் (UPI) என்ற இந்தச் செய்தி நிறுவனத்தை அமைத்தனர்.

தனியாரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஒரே உலகச் செய்தி நிறுவனம் இதுதான். இதற்கு 92 நாடுகளில் 7079 கட்டணம் செலுத்தும் உறுப்பினர்கள் உள்ளனர். 1978இல் இதன் வருவாய் 75 மில்லியன் அமெரிக்கன் டாலர்களையும் தாண்டி விட்டது.

**டாஸ்** (Telegrafnoe Agentsvo Sovetskovo Soiuza) **:** சோவியத் ரஷ்யாவின் செய்தி நிறுவனமாக 1918 முதல் டாஸ் (Tass) நிறுவனம் செயல்படுகின்றது. இதனை 1925 வரை ரோஸ்டா (Rosta) என்று அழைத்தனர்.

இந்த நிறுவனம் சோவியத் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றது. இது அரசையும், பொதுவுடைமைக் கட்சியையும் சார்ந்த நிறுவனமாகும்.

டாஸ் நிறுவனம் 110 நாடுகளில் செய்திகளைத் திரட்ட 40 அலுவலகங்களையும் 61 தனிச் செய்தியாளர்களையும் வைத்திருக்கின்றது உலகச்செய்தி நிறுவனங்களோடு செய்தி பரிமாற்ற ஏற்பா செய்திருக்கின்றது.

## III. இந்தியச் செய்தி நிறுவனங்கள்

நமது நாட்டில் 'பாம்பே டைம்ஸ்' இதழ் இலண்டன் ராய்ட்டர் நிறுவனத்திடமிருந்து 1860 முதல் வெளிநாட்டுச் செய்திகளைப் பெற்று வெளியிட்டது. 1878 இல் ராய்ட்டரின் நிறுவனம் பம்பாயில் ஒரு கிளையை நிறுவி, இந்திய இதழ்களுக்குச் செய்திகளை வழங்கியது. ஆங்கில அரசின் கெடுபிடிகளால் இது மெதுவாக வளர்ந்தது.

இந்தியச் செய்தி நிறுவனத்தை முதன் முதலில் அமைத்த பெருமை கே.சி.ராய் (K.C. Roy) என்பவருடையதாகும். ராய், அரசின் செல்வாக்குப் பெற்றிருந்த 'பயணியர்' (Pioneer) இதழின் ஹென்ஸ்மேன் (Hensman) என்பவரோடு போட்டியிடும் நோக்கில்,

'ஸ்டேட்ஸ்மேன்' (Statesman) 'இங்கிலீஸ் மேன்' (Englishman). 'இந்தியன் டெய்லி நியூஸ்' (Indian Daily News) ஆகிய இதழாசிரியர்களோடு சேர்ந்து 'இந்தியாவின் அசோசியேடட் பிரஸ்' (Associated Press of Indian) என்னும் நிறுவனத்தை அமைத்தார். அவர் அந்த நிறுவனத்தின் இயக்குநராகச் செயல்பட விரும்பினார். ஆனால் அவரோடு சேர்ந்த இதழாசிரியர்கள் அதனை ஏற்கவில்லை. ஆதலால் அதனை விட்டு விலகி, 'பிரஸ் பீரோ' (Press Bureau) நிறுவனத்தை அமைத்தார்.

ராய் 'பிரஸ் பீரோ' நிறுவனத்தின் கிளைகளை கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் அமைத்தார். ஒவ்வொரு இதழும் மாதம் ரூ.350 கட்டணம் செலுத்தியது. பின்னர் நிதி நெருக்கடி ஏற்பட்ட பொழுது ராய் அந்த நிறுவனத்தை ராய்ட்டர் நிறுவனத்தோடு இணைத்தார். பின்னர் 'இந்தியன் நியூஸ் ஏஜென்சி' (Indian News Agency) என்ற நிறுவனத்தை தொடங்கி 1947 வரை நடத்தினார்.

காந்தியடிகளின் இயக்கம் வலுப்பெற்ற பொழுது சதானந்த் (Sadanand) 'பிரி பிரஸ் இந்திய நியூஸ் ஏஜென்சி' (The Free Press of India News Agency) என்ற அமைப்பினை மற்றைய புகழ் பெற்ற இயக்குநர்களோடு சேர்ந்து தொடங்கினார். அரசின் கட்டுப்பாடுகளினால் 'பிரி பிரஸ் இந்தியா' நிதி நெருக்கடிக்கு ஆளானது. இந்த நிறுவனத்திடமிருந்து செய்திகளைப் பெற்று வெளியிடும் இதழ்களை அரசு அபராதம் விதித்து நெருக்கியது. ஆதலால் சதானந்த் 1930இல் 'பிரிபிரஸ்ஜெர்னல்' (Free Press Journal) என்னும் இதழைத் தொடங்கினார். ஆனால் 1935இல் இதழை நிறுத்த வேண்டியதாயிற்று.

பி. சென் குப்தா (B. Sen Gupta) 'பிரி பிரஸி' லிருந்து விலகி, 'இந்திய யுனைடெட் பிரஸ் ' (The United Press of India) என்னும் செய்தி நிறுவனத்தை அமைத்து, அதன் நிர்வாக இயக்குநராகச் செயல்பட்டார். அதன் தலைவராக டாக்டர் பி.சி.ராய் இருந்தார். இது தொடக்க காலத்திலிருந்தே நிதித் தொல்லைக்கு ஆளானது. 1948க்குப் பிறகு வளர்ச்சி பெற்றது.

நமது நாட்டில் இப்பொழுது நான்கு பெரிய செய்தி நிறுவனங்கள் தொலை அச்சு (Teleprinter) வசதியுடன் செயல்படுகின்றன. இவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**இந்தியாவில் பிரஸ் டிரஸ்ட் (Press Trust of India):** 'பிடிஐ' (PTI) என்றழைக்கப் பெறும் இந்தச் செய்தி நிறுவனத்தை 1947 ஆகஸ்டில் இந்தியாவில் ஏழு செய்தித்தாட்கள் சேர்ந்து கூட்டுப்பங்கு நிறுவனமாக அமைத்தன. இந்த நிறுவனம் 1-2-1949 முதல் செயல்படத் தொடங்கியது. இது ராய்ட்டரின் இந்தியக் கிளை நிறுவனமாக



இருந்த இந்தியாவின் அசோசியேடட் பிரசின் (Associated Press of India-APF) பணிகளை மேற்கொண்டது.

இது ஆதாய நோக்கமின்றி செயல்படும் நிறுவனமாகும். இதனுடைய விதிகளின்படி இந்தியாவில் தொடர்ந்து வெளியாகும் செய்தித்தாட்கள் மட்டுமே இதில் பங்கு பெற முடியும். இது கிடைக்கும் ஆதாயத்தைப் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளிக்காமல் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்றது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகத் தலைமையகம் பம்பாயில் இருக்கின்றது. ஆனால் இது தில்லியிலிருந்து தனது செய்திப் பணிகளைக் கவனிக்கின்றது. இந்திய அசோசியேட்டட் பிரசிடமிருந்து இது பணிகளை ஏற்ற பொழுது 30,000 கிலோ மீட்டருக்கு இது தொலை அச்சு முறையைப் பெற்றிருந்தது. இது இப்பொழுது 60,000 கிலொ மீட்டர் தொலைவாக வளர்ந்துள்ளது. இந்தச் செய்தி நிறுவனம் சராசரி ஒரு நாளைக்கு 1,00,000 சொற்கள் செய்திகளாக அனுப்புகின்றது. இவற்றில் ஏறத்தாழ 40 சதவிகிதம் பன்னாட்டுச் செய்திகள்.

இந்த நிறுவனத்தில் 1,100 முழுநேர ஊழியர்கள் உள்ளனர். 297 பகுதிநேரச் செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டி அனுப்புகின்றனர். நியூயார்க், இலண்டன், மாஸ்கோ, கோலாலம்பூர் போன்ற உலகின் முக்கிய நகரங்களில் இதனுடைய முழுநேரச் செய்தியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் தவிர 19 வெளிநாட்டு செய்தி மையங்களில் பகுதி நேர செய்தியாளர்கள் பணியாற்றுகின்றனர். மூன்று உலகச் செய்தி நிறுவனங்களோடும் செய்திகளைப் பெற இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டுள்ளது.

'பிடிஐ' நிறுவனம் மூன்று வகைகளாகத் தனது செய்திப் பணிகளைப் பிரித்துள்ளது. ' ஏ பணி' (A Service) யைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு நாள்தோறும் சுமார் ஓர் இலட்சம் சொற்களை வழங்குகின்றது. இவற்றில் 60 சதவிகிதம் 'பி பணி' (B Service) வாடிக்கையாளர்களுக்கும் 40 சதவிகிதம் 'சி பணி' (C Service), வாடிக்கையாளர்களுக்கும் வழங்குகின்றது. சிறிய செய்தித்தாட்களுக்கு 'பொதுப்பணி' (General Service) ஏற்பாடு செய்கின்றது. செய்திப்பணி தவிர சிறப்புப்பணிகள் (Special Services) பொருளாதார பணி (Economic Service) பணப்பணி (Money Service) ஆகியவற்றையும் செய்கின்றது. 10,000 இதழ்களுக்கு மேல் வெளியிடும் ஆங்கிலச் செய்திதாட்கள், 'ஏ பணிக்கு' மாதம் ரூ.8,400 கட்டணம் செலுத்துகின்றது. இப்பொழுது ஏறத்தாழ 1,000 பேர் கட்டணம் செலுத்தி செய்திகளைப் பெறுகின்றனர்.

**இந்தியாவின் யுனைடெட் நியூஸ் [United News of India]:** 1958இல் இந்தியாவின் யுனைடெட் பிரஸ் (United Press of India) கலைக்கப்பட்ட பொழுது 'யூ என் ஐ' (UNI) என்ற செய்தி நிறுவனத்தை எட்டு செய்தித்தாள்கள் சேர்ந்து உருவாக்கின. இது 1961 முதல் செயல்படுகின்றது.

கடந்த 26 ஆண்டுகளில் இந்த நிறுவனம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. இப்பொழுது இது 64 தொலை அச்சு அலுவலகங்களோடு சுமார் 60,000 கிலோ மீட்டர் தூர இடங்களுக்குத் தொலை அச்சு மூலம் செய்திகளை அனுப்புகின்றது. ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் சொற்களைச் செய்தியாக வழங்குகின்றது.

தில்லியிலிருந்தும் இந்த நிறுவனத்தில் 550 பேர் பணி செய்கின்றனர். நாட்டின் பல்வேறு செய்தி மையங்களில் 164 முழு நேர செய்தியாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் 199 பகுதி நேரச் செய்தியாளர்கள் செய்திகளைத் திரட்டுகின்றனர்.

இது கட்டணம் செலுத்துகின்றவர்களுக்கெல்லாம் ஒன்று போல செய்திகளை வழங்குகின்றது. 'பிடிஐ' போல இது வகைப்படுத்தி செய்திகளை வழங்குவதில்லை. 'பிடிஐ'விட இதற்கு கட்டணம் செலுத்திப் பெறும் இதழ்கள் மிகுதியாக உள்ளன.

'யூ என் ஐ' நிறுவனம் பொருளாதாரப் பணி, (Economic Service)' வேளாண்மைப் பணி (Agriculture Service), பின்புலப்பணி (Back Grounder Service), சக்திப் பணி (Energy Service), நிதி செய்திப் பணி (Financial News Service) ஆகிய பல்வேறு சிறப்புச் செய்திப் பணிகளை வழங்குகின்றது. இப்பொழுது இது இந்தியிலும் செய்திகளைத் தருகின்றது. செய்தித்தாள் வெளியிடும் இதழ்களின் எண்ணிக்கைக்கேற்ப கட்டணம் வசூலிக்கின்றது.

**ஹிந்துஸ்தான் சமாச்சார் (Hindustan Samachar):** எஸ்.எஸ். ஆப்தே (S.S. Apte) என்பவர் தனியார் வரையறுக்கப் பெற்ற பங்கு நிறுவனமாக, 1948இல் ஹிந்துஸ்தான் சமாச்சார் என்ற செய்தி நிறுவனத்தை அமைத்தார். பல்வேறு இந்திய மொழிகளில் செய்திகளை வழங்கும் முதல் நிறுவனமாக இது உருவானது. தேவநாகரி தந்திமூலம் முதலில் பம்பாய், தில்லி, பாட்னா, நாக்பூர் ஆகிய இடங்களுக்கு மட்டும் செய்திகளை அனுப்பினார். 1957இல் தேவநாகரி தொலை அச்சு அமைக்கப் பெற்றபின் இதனுடைய பணி பெருகியது. தகவல் அனுப்புவதற்கான செலவுகள் உயர்ந்ததால் ஆப்தேயால் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை. ஆதலால் 1957இல் இதனை ஹிந்துஸ்தான் சமாச்சார் கூட்டுறவு சங்கமாக மாற்றினார்.



இதனுடைய தலைமையகம் தில்லியில் உள்ளது. இது 54 தொலை அச்சு அலுவலகங்களோடும் 5 பிற அலுவலகங்களோடும் பணிபுரிகின்றது. 25,000 கிலோமீட்டர் தொலைவுக்கு தொலை அச்சு மூலம் செய்திகளை வழங்குகின்றது. ஒரு நாளில் 48,000 சொற்களில் செய்திகளை அனுப்புகின்றது.

இது 250 ஊழியர்களை வைத்திருக்கின்றது. இவர்களில் 134 பேர் இதழியலாளர்கள். இதில் முழுநேர, பகுதிநேர ஊழியர்கள் பணிபுரிகின்றனர். 1981இல் 134 முழுநேர செய்தியாளர்கள் இதற்கு நாடு முழுவதும் இருந்தனர்.

**ஹிந்துஸ்தான் சமாச்சார்** ஹிந்தி, மராத்தி, நேபாளி, குஜராத்தி, ஒரியா, கன்னடா ஆகிய மொழிகளில் தொலை அச்சு·மூலம் செய்திகளை வழங்குகின்றது. இது குறிப்பிட்ட கட்டணம் வசூலிப்பதில்லை. பேச்சு வார்த்தை மூலம் ஒவ்வொரு நிறுவனமும் கட்டவேண்டிய கட்டணத்தைத் தீர்மானிக்கின்றனர்.

**சமாச்சார் பாரதி: (Samachar Barathi):** இரண்டாவது இந்திய மொழிகள் செய்தி நிறுவனமாக 1966இல் சமாச்சார் பாரதி செய்தி நிறுவனத்தை உருவாக்கினார். இது 1967 முதல் செயல்படத் தொடங்கியது. 1970இல் இதன் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பங்குகளை பீகார், குஜராத், இராஜஸ்தான், கர்நாடகா ஆகிய மாநில அரசுகள் வாங்கின.

இதன் தலைமையகம் தில்லியில் உள்ளது. இது 35 தொலை அச்சு அலுவலகங்களோடும், 10 பிற அலுவலகங்களோடும் செயல்படுகின்றது. 25,000 கிலோ மீட்டர் தொலைவிற்கு இதனால் செய்திகளை அனுப்ப இயலும். சராசரி ஒரு நாளையில் 48,000 சொற்களில் செய்திகளை 18 மணி நேரத்தில் அனுப்புகின்றது. இதில் 240 ஊழியர்கள் உள்ளனர்.

இது இந்தியில் முக்கியமாக செய்திகளை வழங்குகின்றது. குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் செய்திகளைத் தருகின்றது. ஒன்று போல ஒவ்வொரு செய்தித்தாளிடமிருந்தும் மாதக் கட்டணமாக ரூ.1,250 பெறுகின்றது.

**இணைப்பும் பிரிவும்:** இந்தியாவில் நெருக்கடிநிலை செயல்பட்டபொழுது இந்திய அரசு நான்கு செய்தி நிறுவனங்களையும் இணைத்து 1976 ஜனவரி 24 இல் 'சமாச்சார்' (Samachar) என்ற அமைப்பை உருவாக்கியது. 1976–77இல் இந்த புதிய நிறுவனத்திற்கு அரசு மானியமாக ஐம்பது இலட்சம் ரூபாய் வழங்கியது. 1977இல் அரசில் மாற்றம் ஏற்பட்டது. 1978 ஏப்ரல் 14 முதல் நான்கு செய்தி நிறுவனங்களும் பிரிந்து மறுபடியும், தனித்துச் செயல்படுகின்றன.